இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

# 1984 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, அநாதைகளுக்கான இஷா-அதுல் இஸ்லாமிய இல்ல (கூட்டிணைத்தல்) சட்டம்

*[1984, ஒகத்து மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1984, ஒகத்து மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60*　　*தபாற் செலவு : சதம் 60*

**1984 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, அனுதைகளுக்கான இஷா-அதுல் இஸ்லாமிய இல்ல (கூட்டிணைத்தல்) சட்டம்**

*[1984, ஒகத்து மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ—ஓ. 43/83.
1672

**அனுதைகளுக்கான இஷா-அதுல் இஸ்லாமிய இல்லத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

"அனுதைகளுக்கான இஷா-அதுல் இஸ்லாமிய இல்லம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவனமொன்று, முஸ்லிம் ஆண் அனுதைகளை, முன்னுரிமையுடன் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஆண் அனுதைகளை வளர்க்கும் நோக்கத்துக்காக இஷா-அதுல் இஸ்லாமிய ஒழுங்கமைப்பினுல் களுத்துறை, தர்கா டவுனில் இதன்முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட இல்லத்தின் அலுவல்களும், குறிக்கோள்களும், சொல்லப்பட்ட இஷா-அதுல் இஸ்லாமிய ஒழுங்கமைப்பின் நிறைவேற்றுக்குழுவினுல் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையொன்றினுல் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வந்துள்ளனவாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட இல்லத்தின் சொல்லப்பட்ட பணிப்பாளர் சபை சொல்லப்பட்ட இல்லத்தைக் கூட்டிணைப்பதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், இவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 1984 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, அனுதைகளுக்கான இஷா—அதுல் இஸ்லாமிய இல்ல (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும், அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "இல்லம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அனுதைகளுக்கான இஷா-அதுல் இஸ்லாமிய இல்லத்தின் பணிப்பாளர் சபையை அப்போதைக்கு அமைக்கின்ற ஆட்களும், அவர்களது வழியுரிமையாளர்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "அனுதைகளுக்கான இஷா—அதுல் இஸ்லாமிய இல்லம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறு வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதலும், அவ்வாறிருத்தலும் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றுவதற்கும் முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாதலும் வேண்டும். அனுதைகளுக்கான இஷா—அதுல் இஸ்லாமிய இல்லத்தைக் கூட்டிணைத்தல்.

எ 71299—2,650 (07/83)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) அருகதையுள்ள முஸ்லிம் ஆண் அனுதைகளை, முன்னுரிமையுடன் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஆண் அனுதைகளை வளர்த்தல் ;

(ஆ) அவர்களது, கல்வி, சமய அபிவிருத்திக்கான வசதிகளை அவர்களுக்கு ஏற்பாடுசெய்து கொடுத்தல் ;

(இ) வாழ்க்கைத்தொழில் பயிற்சிக்கான வாய்ப்புக்களை அவர்களுக்கு ஏற்பாடு செய்துகொடுத்தல் ; அத்துடன்

(ஈ) அவர்களது தேர்ச்சிப்பேறுகளுக்கு இணங்க உயர் கல்விக்கு அல்லது தொழிலுக்கு வழிகாட்டலும், உதவிபுரிதலும்.

பணிப்பாளர் சபை.

4. (1) கூட்டுத்தாபனத்தின் பொதுவான ஆளுகையும் பணிப்பும், பின்வருவோரை உள்ளடக்கும் இருபது உறுப்பினர்களைக் கொண்டமைந்த பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் :—

(அ) இஷா–அதுல் இஸ்லாமிய ஒழுங்கமைப்பின் நிறைவேற்றுக்குழுவினுல் நியமிக்கப்பட்ட பதினெட்டு உறுப்பினர்கள் ; அத்துடன்

(ஆ) இஷா–அதுல் இஸ்லாமிய ஒழுங்கமைப்பின், முறையே செயலாளராகவும், பொருளாளராகவும் அப்போதைக்குப் பதவிவகிக்கின்ற ஆட்களாகவுள்ள வேறு இரு உறுப்பினர்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் உறுப்பினர்களுள் எவரும்—

(அ) மரணமடைவதன் ;

(ஆ) பதவி விலகுவதன் ; அல்லது

(இ) இஷா–அதுல் இஸ்லாமிய ஒழுங்கமைப்பின் நிறைவேற்றுக் குழுவினுல் அகற்றப்படுவதன்,

காரணமாக பணிப்பாளர் சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடம் எதுவும் ஏற்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய வெற்றிடமானது, இஷா–அதுல் இஸ்லாமிய ஒழுங்கமைப்பின் நிறைவேற்றுக் குழுவினுல் நிரப்பப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் எதுவும் உள்ளதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதெனக் கருதப்படுதல் ஆகாது.

(4) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்சபை, இச்சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில் பதவி வகிக்கின்ற இல்லத்தின் பணிப்பாளர் சபையாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அச்சபை இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடையும் வரை தொடர்ந்து பணிபுரிதலும் வேண்டும். அதன்பின்னர் அடுத்துவரும் சபை ஒவ்வொன்றினதும் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் நாளாந்த அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும், பணிப்பாளர் சபையின் பொதுவான பணிப்புக்கும் அமைவாக, பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுக்குழுவொன்றினால் திருவகிக்கப்படுதல் வேண்டும். இந்நிறைவேற்றுக்குழு— பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுக் குழு.

(அ) கூட்டுத்தாபன விதிகளுக்கிணங்க சபையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட தவிசாளர், செயலாளர், பொருளாளர், முகாமையாளர் வேறு இரு உறுப்பினர்கள் ; அத்துடன்

(ஆ) இஷா-அதுல் இஸ்லாமிய ஒழுங்கமைப்பின், முறையே செயலாளராகவும், பொருளாளராகவும் அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆட்கள்,

ஆகியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபையின் முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் பதவிவகிக்கின்ற இல்லத்தின் நிறைவேற்றுக் குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அந்நிறைவேற்றுக்குழு இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடையும்வரை தொடர்ந்து பணிபுரிதல் வேண்டும். அதன் பின்னர் அடுத்துவரும் குழு ஒவ்வொன்றினதும் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

6. இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பணிப்பாளர் சபையானது, கூட்டுத்தாபனத்தின் பெயரில்— பணிப்பாளர் சபையின் பொதுத் தத்துவங்கள்.

(அ) உள்நாட்டு வளங்களிலிருந்தேனும் வெளிநாட்டு வளங்களிலிருந்தேனும் நிதிகளைக் கோருவதற்கும், திரட்டுவதற்கும், காசாகவோ, பொருளாகவோ மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலும் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுப்பதற்கும் கொடுப்பதற்கும், ஈடுவைப்பதற்கும், அடகு வைப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் அல்லது வேறு வகையில் கையுதிர்ப்பதற்கும் ;

(இ) அதன் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கும், அவர்களுக்கு வேதனமளிப்பதற்கும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் ;

(ஈ) வங்கிக் கணக்குகளைத் தொடங்குவதற்கும், தொழிற்படுத்துவதற்கும், மூடுவதற்கும் அத்துடன் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாது பணம் கடன் வாங்குவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதன் இடைநேர்விளைவான அல்லது அதற்குகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும், காரியங்களையும் செய்வதற்கும்,

தத்துவம் உடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

7. பொதுக்கூட்டம் எதிலும் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குகள் கொண்டும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் பணிப்பாளர் சபைக்கு சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் மாற்றப்படலாம், அவற்றுக்குச் சேர்க்கப்படலாம் அவை திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

*இல்லத்தினால் செலுத்தப்படற்பாலனவும், இல்லத்துக்குச் செலுத்தற்படற்பாலனவுமான தனிசுகள்.*

8. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் இல்லத்துக்கு இருந்துவந்த எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், இல்லத்துக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும், இல்லத்துக்குச் செலுத்தப்படற்பாலவையான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்பட வேண்டும் என்பது.*

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, பணிப்பாளர் சபையின் தவிசாளரினதும் அல்லது செயலாளரினதும் அல்லது பொருளாளரினதும் அத்துடன் வேறோர் உறுப்பினரினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான எச்சாதனத்திலும் இடப்படுதலாகாது ; அவர்கள் தாம் சமூகமளித்திருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களைக் கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரதும் உரிமைகளைப் பேணல்.*

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ, பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.